பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 09 2026** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2) படைப்பாற்றல் பொருளாதாரம் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) காலை உணவு விரிவாக்கத் திட்டத்தின் மூலம் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கூடுதலாக பயனடைவார்கள் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4) மின்வெட்டு பிரச்சினைக்கு தவெக அரசு உடனடியாக தீர்வுகாண வேண்டும் என்று திமுக மற்றும் அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளன.

5) ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

கொச்சியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக கூறினார்.

ஏற்றுமதி 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

படைப்பாற்றல் பொருளாதாரம் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் **Sonipat-**ல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

திரைப்படங்கள், இசை, வடிவமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் அதிக அளவில் உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பிரிவுகளில் புதிய தொழில் வாய்ப்புகளும் உருவாகி வருவதாக அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மூன்று புள்ளி ஒரு சதவீதத்தை படைப்பாற்றல் பொருளாதாரம் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வாய்ப்புகளை இளையோர் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எல்.முருகன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழக முதலமைச்சர் திரு விஜய் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் மற்றும் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டங்கள் தொடர்பாக இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மாநில அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காலை உணவுத்திட்டம் விரிவாக்கப்படுவதன் மூலம், ஆறு முதல் எட்டாம்வகுப்பு வரை பயிலும் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கூடுதலாக பயன்பெறுவார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை வரும் 22-ஆம் தேதியும், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை 28-ஆம் தேதியும் முதலமைச்சர் தொடங்கிவைக்க உள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் தடையற்ற மின்சாரத்தை வழங்க தவெக அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலம் முழுவதும் மின்வெட்டு அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக, பொதுமக்கள் வீதிகளில் இறங்கி போராடும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்வெட்டுப் பிரச்சினைக்கு தீர்வுகாண உரிய நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திமுக கோரியுள்ளது.

அஇஅதிமுக-வும் இதேகோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

தவெக அரசின் நிர்வாக திறமையின்மையின் காரணமாக மின்வெட்டு அதிகரித்துள்ளதாகவும் அக்கட்சி சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அஇஅதிமுக கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

நவோதயா பள்ளிகளை அமைப்பதற்கான இடங்களை அடையாளம் காணுமாறு உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை தவெக அரசு காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பள்ளிகளை அமைப்பதற்கான நிலங்களை அடையாளம் காணுமாறு ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை செயல்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது.

இனியாவது தவெக அரசு இதில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

நகர்ப்புறங்களில் சொத்து வரியை மீண்டும் உயர்த்தக்கூடாது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், தவெக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை மேம்படுத்துவதற்காக சொத்து வரியை உயர்த்துவது உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகளை மாநில நிதி ஆணையம் அரசுக்கு அளிக்க உள்ளதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளாட்சிகளின் நிதிநிலையை மேம்படுத்த ஏராளமான வழிமுறைகள் இருக்கும்போது, சொத்து வரியை உயர்த்துவது என்பது ஏற்புடையது அல்ல என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சொத்து வரியை உயர்த்த வேண்டும் என்று மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்தாலும், தவெக அரசு அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் பத்திரிகையாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென்மண்டல தலைமை இயக்குநர் திரு வி.பழனிசாமி கூறியுள்ளார்.

கரூரில் சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் பயிலரங்கில் பங்கேற்று பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — பழனிசாமி - 43 Sec.)***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்றும், நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 54 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை குறித்த ஆலோசனை கூட்டம் மாநில

அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு நல்லசிவன் தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------------

தென்காசி மாவட்டம் ஊர்மேலழகியான் கிராமத்தில் குளங்களில் கொட்டப்படும் குப்பைகளை உடனடியாக அகற்றுமாறு ஆட்சியர் திரு ரஞ்ஜீத் சிங் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

-----------------------

குறைதீர் கூட்டம் ஆட்சியர் திருமதி பத்மஜா தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------------

தருமபுரியில் உள்ள கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை ஆட்சியர் திரு சரவணன் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------------

வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப மேலாண்மை அறிவுசார் விழா இன்று தொடங்கியது.

----------------------

தூத்துக்குடி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில உள்ள சமரச மையத்தில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி, டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிவரை தேசிய சமரச தீர்வு முகாம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் 200-க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் பங்கேற்றுள்ள இரண்டு நாள் தொழில்நெறி கண்காட்சி இன்று தொடங்கியது.

-----------------

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குப்பையை தரம் பிரிப்பது குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ராஜ்கோட்டில் நடைபெற்ற இப்போட்டி மழை காரணமாக 20 ஓவராக குறைக்கப்பட்டது.

இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்தது.

Yashbardhan Chauhan அதிரடியாக ஆடி 34 பந்துகளில் 54 ரன் குவித்தார்.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா, 7 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

---------------

இந்தியா — தென்கொரியா இடையேயான டேவிஸ் கோப்பை தகுதிச் சுற்று டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற இரண்டு ஒற்றையர் பிரிவு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று தென்கொரியா முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<**END**>>>>>>